சொத்தின் சுவாதீனத்துடன் கூடிய மேலீடு கடன் பத்திரம்

201_ம் வருடம், மாதம் ம் நாள், _____ என்ற விலாசத்தில் வசிக்கும் திரு._____ அவர்களின் குமாரர் சுமார் _____ வயதுள்ள திரு. _____ (அடையாள அட்டை _____) (கைபேசி எண்._____)ஆகிய உங்களுக்கு

_____ என்ற விலாசத்தில் வசிக்கும் _____ அவர்களின் குமாரர் சுமார் ___ வயதுள்ள திரு._____ ஆகிய நான் (அடையாள அட்டை _____) (கைபேசி எண்._____) என் மனப்பூர்வமான சம்மதத்துடன் எழுதிக் கொடுக்கும் சொத்தின் சுவாதீனத்துடன் கூடிய மேலீடு ஆவணம் என்னவென்றால்,

இதன் கீழ் சொத்து விவரத்தில் விவரிக்கப்பட்டுள்ள _____ மாவட்டம், _____ சொத்தானது நான் எனது சொந்த வருவாய் மற்றும் சேமிப்பைக்கொண்டு _____ தேதியிட்ட _____ சார்பதிவக 1 புத்தக ஆவண எண்._____/___ மூலம் கிரையம் பெற்று அதுமுதல் எந்தவிதமான வில்லங்கத்திற்கும் உட்படுத்தாமல் சர்க்கார் வரி வகையறாக்கள் செலுத்திக்கொண்டு என்னுடய சொந்த அனுபவத்திலும் சுவாதீனத்திலும் சகல சர்வ சுதந்திர பாத்தியங்களுடனும் சகல உரிமைகளுடனும் ஆண்டு அனுபவித்து வருகையில், எனது அவசர குடும்ப செலவின் காரணமாக தங்களது பெயருக்கு ரூ._____க்கு _____ வருட கெடுவிற்கு _____தேதியில் தங்களுக்கு எழுதிக் கொடுத்த சொத்தின் சுவாதீனத்துடன் கூடிய ஈடு அடமான ஆவணம் _____ சார்பதிவகத்தில் 1 புத்தக ஆவண எண்._____/___ ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி ஈடு கடன் பத்திரத்தின் அசல் தொகை பிரத்தியேகமாய் இருக்க மீண்டும் இரண்டாவது தடவையாக அடியிற்கண்ட சொத்தையே ரூ._____க்கு தங்களுக்கு இதன் மூலம் சுவாதீனத்துடன் கூடிய மேலீடு செய்துக்கொடுத்து என்னுடைய குடும்ப செலவுக்கு தங்களிடமிருந்து மேற்ச்சொன்ன ரூ._____ஐ பெற்றுக்கொண்ட வகையில் மேற்ச்சொன்ன கடன் தொகை என் பற்றாகியது.

Verified by RedEstate™

எனவே இன்று முதல் முழு அடமானத் தொகையான ரூ._____ (ரூபாய் _____)யை _____ வருடத்திற்குள் தங்களிடமோ தங்களின் வாரிசுகளிடமோ / அதிகாரம் பெற்றவர்களிடமோ தவறாமல் திரும்ப வழங்கி சொத்தின் சுவாதீனத்தை மீட்டுக்கொள்ள சம்மதிக்கிறேன்.

மேற்படி அடமானத் தொகையை நான் கொடுக்க தவறினால் தாங்கள் என்மீதும் சொத்து விவரத்தில் கண்ட சொத்தின் மீதும் தக்க நடவடிக்கை எடுத்து கொள்ளவும் மற்றும் Transfer of Property Act Sec.69 மற்றும் 69A-படியும் நடவடிக்கை எடுத்து அதற்கான செலவுகளுடன் சேர்த்து மொத்த தொகையையும் நீங்கள் என்னிடமிருந்து வசூல் செய்துக் கொள்ளவும் நான் மனப்பூர்வமாய் சம்மதிக்கின்றேன்.

சொத்து விவரம்

இந்தப்படிக்கு நான் என் மனப்பூர்வமான சம்மத்துடன் கீழ்கண்ட சாட்சிகள் முன்னிலையில் சம்மதித்து எழுதிக் கொடுத்த சொத்தின் சுவாதீனத்துடன் கூடிய மேல் அடமான கடன் ஆவணம்.

சாட்சிகள்

1.

2.

Verified RealEstate™